உள்ளதை வேருகச் சாற்றும் 'உண்மையாளர்'!

Phone No 4502 | Regd. No.M. 5458
விலை அரை அணு | இலங்கை, 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (2—2—50) வெளியூர் (3—2—50) [இதழ் 158

பட்டாபியாரின் "பரிதாபப்" பேச்சு!

மக்கள் தீர்ப்பை மதிக்க மறுக்கும் 'மகராஜர்கள்'!

ஏகாதிபத்திய தாசர் இங்கேது; அங்குண்டு!

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பெருஞ் சலுகைகளை அனுபவித்து வசதியான வாழ்க்கை வீடுபட்டிருந்தோரே பெரும்பாலும் இன்று காங்கிரஸ் பற்றிக் குறையும் புகாரும் கூறி வருகின்றனர். கடந்த முப்பதாண்டுகாலமாக நாட்டு விடுதலைக்காகப் போராடி, தொல்லை பல ஏற்ற காங்கிரஸ்காரர்கள் மீது அவர்கள் பொருமைப்படுகின்றனர். இப் புகார்கள் புதியன அல்ல; பல மாகாணங்களிலும் இப்படித்தான் கூறி வருகின்றனர்.

அம்பாலாவைச் சேர்ந்த ரூப்பாரில் காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றியிருக்கும் தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய உபகண்டத்தை ஏகாதிபத்திய பிடிப்பிலிருந்து பெற்று இரண்டரையாண்டு காலத்துக்கு மேலாக ஆட்சிக் கடிவாளத்தை யேந்தி வந்திருக்கும் காங்கிரசாருக்கு டாக்டர் பட்டாபி—காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் 'சர்டிபிகேட்' கொடுக்கவந்து இன்று இவ்வக்காலத்தை [illegible]ங்கியுள்ளார். பொறுப்புள்ள பதவியிலிருக்கும்—பொறுப்பிருக்கவேண்டிய தலைவர் கூறுகையால், இதனை நாம் சிறிது ஆராயவேண்டிய கட்டப்பாட்டிலுள்ளோம்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இன்பம் பல அனுவித்தார் தான், இன்று காங்கிரசைக் குறை கூறுகிறார்களாம். காங்கிரசை யார், எதற்காக எப்படிக் குறைகூறுகிறார்களென்பதை உணர்ந்தோ, உணராமலோ பேசியிருக்கும் பட்டாபியார் உள்ளபடியே மக்களை மருளவைக்கவே இதனை வெளியிட்டிருக்கிறாரென்பதையாரும் மறுக்கமுடியாது. 'பாலும் தேனும் புரண்டோடிடும்' என்ற வாக்குறுதியளித்து நாட்டு நிர்வாகத்தை யேற்ற காங்கிரசார், இன்று மகாராஜாக்களுடையவோ, சமஸ்தானாதிபதிகளுடையவோ, ஜமீன்தாரர்களுடையவோ, மிட்டா மிராசுகளுடையவோ கண்டனக்கணைகளுக்கு ஆளாகிவிடவில்லை! இன்னும் கூறப்போனால் சமஸ்தானாதிபதிகளும், மகாராஜாக்களும் இன்ன பிறவும் இன்று காங்கிரஸ் முகாமில் தான் கட்டளை பிறப்பித்து 'கன' வாழ்வு நடத்திவருகின்றனர். காங்கிரஸ் ஆட்சி பீடத்துக்கு ஆதரவாகவும், பெருந்துணையாகவும் இன்று வரை இருப்போர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நீடிப்பை விரும்பியும், வரவேற்றும் இருந்து வந்தோரேயென்பதையும் பட்டாபியார் மறுக்கமுடியுமா? பிரிட்டிஷ் அதிகார வர்க்கப் பலம் பெற்று ஈண்டு அரசோச்ச எல்லாவகை அன்புதவிகளையும் நல்கி வந்த அந்த ஒரு சிலரே இன்று காங்கிரஸ் ஆட்சியின் கடைக்காலாக இருந்து வருகிறார்களென்பதை யாரே மறுக்கமுடியும்? ஏனவே, உண்மையைத் திரித்து வேருகச் சாற்றும் பட்டாபியார், காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு உண்மையாக நடந்து கொண்டவராக மாட்டாரென்பதோடு, மக்களுக்கும் பெருந்துரோகம் விளைத்தவராவார். பொதுமக்களின் அபிலாஷைகள், விழைவுகள், விருப்பங்கள் இன்னபிறவற்றை நிறைவேற்றத்தவறிவிட்டது காங்கிரஸ் என்பது, இன்று ஏகே பித்த கருத்தாயிருந்து வருகிறது. 'பெற்ற சுதந்திரத்தை மக்கள் ம[illegible]ட்டேனென்கிறார்கள்' என்று பட்டேல், நேரு போன்றோர் பரதவிக்கும் பரிதாப நிலை வந்துவிட்டது இந்த நேரத்தில் பட்டாபி கூறுகிறார், பழைய ஏகாதிபத்திய பாதந்தாங்கிகளே இன்று காங்கிரஸைக் கண்டிக்கிறார்களென்று. பழைய ஏகாதிபத்திய தாசர்கள் இன்று வெளியிலில்லையே; காங்கிரஸில்தானே 'பக்கா' காங்கிரஸ்காரர்களாக இருந்து வருகிறார்கள்! இதை ஏனோ மறந்தார் பட்டாபியார்?

காங்கிரஸுக்கு நற்சான்றளிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் பட்டாபியாரைச் சேர்ந்ததல்ல; மக்கள் மன்றத்தைச் சேர்ந்தது. மக்கள் மன்றத்தீர்ப்பையறிய முற்படவேண்டுமே தவிர, தனது எக்ஸ் பார்ட்டித்தீர்ப்பைத் திணிக்க முற்பட உரிமையில்லை பட்டாபியாருக்கு.

காங்கிரஸைக் குறை கூறுவோர் யாரென்பதுபற்றி உள்ளபடியே பட்டாபியாருக்குத் தெரியவில்லையெனில், ஒரு பத்து நாட்கள் அவர்கள் நாட்டுப்புற பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து பார்க்கட்டும்; பிறகு தெரிவார். யார் காங்கிரசைக் குறை கூறுகிறார்களென்பதை.

—

சிங்கப்பூர், பிப். 1—

ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்திருப்பதால், ஹோசிமின் படைகளுக்கு சோவியத் ஆயுத உதவி தாராளமாகக் கிடைக்குமோ என்று இங்குள்ள வட்டாரங்களில் கவலை ஏற்பட்டிருக்கிறது —ரூனேரம்

வட சீனத்துறைமுகங்கள் மீது சோவியத் ஆதிக்கம் கோருகிறதாம்

மா சே துங்குடன் ஸ்டாலின் பேச்சு வார்த்தை

லண்டன், பிப் 1—

மாஸ்கோவில் மாசேதுங்குடன் மார்ஷல் ஸ்டாலின், "கடும்பேரம்" நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

பின்கண்ட கோரிக்கைகளை ஸ்டாலின் மாசேதுங்கிடம் வெளியிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது:

வட சீன துறைமுகங்களான போர்ட் ஆர்தர், டைரன், விஹெய்வீஹெய்சோ, ட்ஸெங்டோ. செபூ முதலியவைகளின் மீது ரஷ்யாவுக்கு ஆதிக்கம் இருக்கவேண்டும்.

மேற்கு சோவியத் பிரதேசத்திற்கு சுமார் 5 லட்சம் தொழிலாளர்கள் அனுப்பப் படவேண்டும்.

மஞ்சூரியாவிலிருந்து ஏராளமான உணவுப் பொருள்கள் அனுப்ப வேண்டும்.

சிங்கியாங், உள் மங்கோலியா மஞ்சூரியா, திபேத் ஆகிய பிரதேசங்களில் ரஷ்யர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கவேண்டும்.

மாசேதுங்கின் போட்டி கோரிக்கைகள்

இந்தச் கோரிக்கைகள் சிலவற்றிற்கு மாசேதுங் இணங்க மறுத்துவிட்டார் என்பதுடன், போட்டிக் கோரிக்கைகளையும் வெளியிட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

ரூ. 13,000,000,00க்குக் கடன் உதவியும், போதிய ராணுவக்களவாடங்களையும் 'சப்ளை' செய்யும்படி அவர் கேட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

பேச்சு வார்த்தைகளில் உடன்படிக்கை ஏற்பட்டதாக மாஸ்கோவிலிருந்து அறிக்கை வெளியாகலாம் என்றும், ஆனால் மசேதுங்கோரிக்கைகளுக்கு ரஷ்யா இணங்காதென்றும் நம்பப்படுகிறது.

—

பெர்லின் போக்குவரத்தில் மீண்டும் முட்டுக்கட்டை

பெர்லின், பிப் 1—

பெர்லின் போக்குவரத்து முட்டுக்கட்டை தீர்ந்து விட்டது என்று, பிரிட்டிஷ் அதிகாரிகள் அறிவித்த 24 மணி நேரத்திற்குள் மீண்டும் போக்குவரத்தைத் தடையை கிழக்கு ஜெர்மன் போலீசார் ரஷ்ய உத்திரவின் பேரில் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

பெர்லினுக்கு மார்ஷல் உதவித் சப்ளைகள் வாகனங்கள் கண்காணிக்கும்படி ரஷ்ய உத்தரவு கூறுகிறதாம்.

திபேத்தைக் கைப்பற்ற சீனக் கம்யூனிஸ்டுகள் தீவிரம்

எல்லைப் பகுதிகளில் பயிற்சி பெற்ற கொரில்லாப் படைகள்

லண்டன், பிப். 1—

திபேத்தைக் கைப்பற்ற சீனக் கம்யூனிஸ்டுகள் பூர்வாங்க முஸ்தீபுகளைச் செய்து வருவதாக, ராச்சியிலிருந்து செய்தி கிடைத்திலிருந்து இதனால் இந்தியா—பாகிஸ்தான், காஷ்மீர் இவைகளுக்கு ஆபத்து வருமோ என்ற கவலை, இங்குள்ள வட்டாரங்களில் இருந்து வருகிறது.

கம்யூனிஸ்டு வசமுள்ள திபேத் எல்லை பிராந்திய நகரில் பயிற்சி பெற்ற கொரில்லாப் படைகளை, சீன கம்யூனிஸ்டுகள் வைத்திருக்கின்றனர். இவர்கள் ஐந்தாம் படை வேலை செய்யவும் தூண்டப்படுகின்றனர் என்றும், லஸாவிலிருந்து வந்துள்ள ஒரு அயல்நாட்டு விமர்சகர் கூறுகிறார். இந்தபடைகளில் பெண்களும் இருக்கின்றனராம்.

திபேத் கம்யூனிஸ்ட் வசமாகி விட்டால் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மீது பாய ரஷ்யாவுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா, திபேத் விஷயத்தில் என்ன செய்யப்போகிறது என்பது பற்றி பத்திரிகைகள் எதுவும் கூறவில்லை. ஆனால் திபேத் சுதந்திரமாக இருக்க விரும்புவதை இந்தியா வரவேற்பதாக[illegible]றப்படுகிறது

கம்யூனிஸ்டு சீனவின் வர்த்தகப் பெருக்கத் திட்டம்

லண்டன், பிப். 1—

கம்யூனிஸ்டு சீனவின் வர்த்தகத்தை விருத்திசெய்த ரூ[illegible] முதலாளிகளின் ஆதரவை சோ-என்-லாய் நாடுவதாக இன்று செய்தி கிடைத்திருக்கிறது. சீனவில் முன்பு ஜெர்மன் கான்ஸல் ஜெனரலாக இருந்த பிட்டர் என்பவர் மூலம் இந்த ஆதரவைப் பெற முயற்சி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தன் சர்க்காரில் சில ஜெர்மனியர்களை ஆலோசகர்களாகவும் வைத்துக்கொள்ள சோ-என்-லாய் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

—

தென்னுப்பிரிக்காவில் பாகிஸ்தான்!

ஜோஹன்னஸ்பர்க், பிப். 1—

இதுவரை கிறதிபிசிக் கொள்கைகளை ஐக்கியமாக எதிர்த்து வந்த தென்னுப்பிரிக்க இந்தியர்களிடையே, பிளவு ஏற்படும் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்தியா பிரிவினை செய்யப்பட்டதன் எதிரொலி இரு ஆண்டுகள் கழித்து அங்கு காணப்பட ஆரம்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தென்னுப்பிரிக்க இந்தியர்களிடையேயுள்ள முஸ்லிம்கள் ஒருதனி காங்கிரஸ் அமைத்துக் கொள்ளப் போவதாகவும், இக்காங்கிரஸின் கூட்டம் டர்பனில் நடைபெறவிருக்கிறதென்றும் தெரிகிறது.

வட்டமேஜை மாநாட்டுக்குப்பின் இந்தப் பிரிவினை ஏற்பட்டுவிடலாமென்று கூறப்படுகிறது.

—

கிரீஸில் கொரில்லாப் போர்

கம்யூனிஸ்டுகள் திட்டம்

ஏதென்ஸ், பிப் 1—

கிரீஸில் மீண்டும் கொரில்லாப் போரை நடத்த கம்யூனிஸ்டுகள் திட்டம் போட்டிருப்பதாக கிரேக்க ராணுவ தலைமைக் காரியாலயம் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

புதுப் பிரசாரத்துடன், திடீர் மின்னல் தாக்குதல்களுக்கும் கம்யூனிஸ்டுகள் திட்டம் போட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. திரேஸ், கிழக்கு மாஸிடோனியா ஆகிய இடங்களில் சில கலகப் படைகள் இன்னும் வேலை செய்து வருவதாக ராணுவத் தலைமைக் காரியாலயம் அறிவிக்கிறது.

—

வேவு பார்ப்பவர்களை வேவு பார்ப்பதற்காக 20 000 பேர் கொண்ட சிறுவர் சிறுமியர் படையொன்றை திரட்ட ரஷ்யா ஜெர்மனி திட்டம் போட்டிருக்கிறது. இப்படை மார்ச் மாதத்தில் வேலை செய்ய ஆரம்பிக்குமாம்.

மாலை மணி

சென்னை 2—2—50 வியாழக்கிழமை

வட்டி வாங்கும் வல்லூறு!

இரத்தத்தை உறிஞ்சும் அட்டை, புண்ணைக் கொத்தித் தின்னும் வல்லூறு, வட்டிக்கு வட்டி வாங்கும் வடநாட்டு மார்வாரி ஆகிய இவை மூன்றும் தோற்றத்திலே வேறுபாடுடைய பிராணிகள் எனினும், பண்பிலே, நோக்கத்திலே ஒரே தன்மையுடையன என்பதை யாரும் நன்கு அறியக் கூடும்!

வெந்த புண்ணிலே குத்தும் வல்லூறு தன் வெம்பசி தீர, புண்ணைக் கொத்துவதிலே கண்ணையும், கருத்தையும் செலுத்துவது போல, வடநாட்டு மார்வாரிகள் ஏழை எளியவரின் வறுமை என்னும் புண்ணில் உட்கார்ந்து, வறண்டிருக்கும் ஏழைகளின் கொஞ்சநஞ்ச வாழ்வையும், வட்டி வாங்குவதன் மூலம் உறிஞ்சி வருகிறார்கள் என்பதை நாம் குறிப்பிடும்போதெல்லாம், தேசியத் தோழர்களும், அவர் போன்றோரும் நம்மைப் பார்த்து எள்ளிநகையாடி குறுகிய மனப்பான்மை என்று கூறி கேலிப் பேச்சு பேசுகின்றனர்.

வல்லூறு கொத்தும் போது புண்ணைத் தாங்கி நிற்கும் பிராணி படும் வேதனையைப் பற்றி நினைக்க வல்லூறு எப்படி மறந்து விடுகிறதோ அது போலவே வட்டிக்கு வட்டி வாங்கி வதைக்கும்போது, ஏழை எளியவர் படும் துன்பத்தை நினைக்க மார்வாரிகள் மறந்து விடுவர் என்பது மட்டுமல்லாமல், நினைக்கவும் மறுத்து விடுகின்றனர் இந்தக் கொடுமைக் காட்சிகள், தொழிலாளத் தோழர்களும், பாட்டாளி மக்களும வாழும் சுற்றுச் சூழல்களில், அன்றாட நிகழ்ச்சிகளாக இருப்பதைக் காணலாம்.

ஏழைகளின் கடைசிச் சொட்டு இரத்தம் வரையில் உறிஞ்சி ஏப்பமிட்டுக் கொழுத்துவாழும் இந்த வடநாட்டு வல்லூறுகளுக்கு இப்பொழுது கிடைக்கும் வட்டி விகித ஆதாரம் போதுமானதாக இல்லையாம்; வட்டி விகிதத்தைப் பெருக்கி இன்னும் அதிகமான அளவுக்கு ஏழை எளியவரின் இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்ற அளவுக்குத் தம் ஆசையைப் பேராசையாக வளர்த்துக் கொண்டிருக்கின்றன

வடநாட்டு வல்லூறுகளின் பிரதிநிதியாக இருந்து, அவைகளுக்காக வக்காலத்து வாங்கிப் பேசும் முறையில் தோழர் பி. பராஷ்மல் என்னும் மார்வாரி 1—2—50 "இந்தியன் எக்ஸ்பிரஸ்" செய்தித் தாளில் ஆசிரியருக்கு முடங்கல் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

வட்டிக்குக் கடன் கொடுத்து அதன் மூலம் இம் மாகாணத்தில் வாழ்க்கை நடத்துபவர்கள் பெரும்பாலோரும ராஜஸ்தானைச் சேர்ந்தவர்களாம். மிகக் குறைந்த லாபத்தில் இந்தத் தொழிலை நடத்துகிறார்களாம். பணச் செலாவணி மிகக் கடினமாக இருக்கிறதாம் இப்படிப்பட்ட நிலையில் 1943ம் ஆண்டில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அளவான 6¼ சதவிகித வட்டி முறைதான் இப்பொழுதும் அமுலிலிருந்து வருகிறதாம் அதிலிருந்து சாமான்களின் விலையும், வாழ்க்கைச் செலவின் தரமும் எவ்வளவோ உயர்ந்து விட்டிருக்கவும் வட்டி விகித முறை மட்டும் உயராமலே இருந்துவருகிறதாம். பெரும்பாலும் மத்தியதர வகுப்பினரே தங்களிடம் கடன் வாங்குபவர்களாக உள்ளனராம். பெரும் பணக்காரர்கள் அதிக வட்டி விகிதத்திற்குப் பணம் கொடுக்கும் பாங்கிகளிலேயே தங்கள் பணத்தை முதலாகப் போட்டுவிடுகிறார்களாம். ஆகவே வட்டி வாங்கும் விகிதத்தை 6¼ சதவிகிதம் என்பதிலிருந்து 15 அல்லது 18 சதவிகிதத்திற்கு உயர்த்தித் தரும்படி மார்வாரிகள் சார்பாக அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறாராம். இதனால் மார்வாரிகளுக்கும் உதவி செய்ததாகிறதாம், முதலிடுவோர்க்கும் நன்மை ஏற்படுகிறதாம்! இதுதான் அரசாங்கத்திற்கு வல்லூறு கூறும் யோசனை!

6¼ சதவிகித வட்டி வாங்குவது கட்டவில்லையாம்; 18 சதவிகிதத்திற்கு உயர்த்தவேண்டுமாம்; எப்படி வல்லூறின் பேராசை!

6¼ சதவிகித வட்டிதான் வாங்க வேண்டும் என்று விதித்த காலம் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சி நாட்டிலே நிலவியிருந்த காலம். இப்பொழுது மார்வாடிகள் தம் சொந்த சுயராஜ்ய ஆட்சிக் காலத்தில் 18 சதவிகித வட்டியை மக்களிடத்திலிருந்து பறித்துக்கொள்ள அனுமதி கோருகின்றனர் இன்றைய ஆட்சியில் அந்தக் கோரிக்கை இனிது நிறைவேறக்கூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. ஆட்சி அவர்களது ஆதிக்கம் பெற்றிருக்கின்றது என்ற காரணத்தால், மார்வாரிகளின் கோரிக்கை நிறைவேற்றப் பட்டாலும்கூட நாமும் ஆச்சரியப் படுவதற்கில்லை, ஆட்சி அவர்களுடைய ஆதிக்கத்தால் நடைபெறுகிறது என்ற அதே காரணத்தால்.

இப்பொழுது சட்டப்படி 6¼ சதவிகிதம் வட்டிதான் வாங்கலாம் என்றிருக்கிறதே தவிர, எழுத்திலே இந்த விகிதம்தான் குறிக்கப்படுகிறதே யொழிய, உண்மையில் மார்வாரிகளும், மற்ற வட்டி வாங்கும் வடநாட்டவரும், மறைமுகமாக வாங்கும் வட்டி விகிதம் 18 சதவிகிதமாகவும், 25, 30 சதவிகிதமாகவும்தான் [illegible] இருந்து வருகிறது. அதிகப்படி மறைமுகவட்டியை முன்னரே வாங்கிக் கொண்டுதான் பெரும்பாலான வட்டிக்கடைக்காரர்களும் கடன்கொடுக்கிறார்கள் என்பதை யாரும் நன்கு அறியலாம். வாழ்க்கையை ஈடேற்ற கடன் வாங்குவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு வந்துவிட்ட ஏழை, எவ்வளவு அதிகப்படியான வட்டியையும் கொடுக்கச் சம்மதித்தே கடன் பெறுகின்றனர். இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி, ஏழைத் திராவிடரின் வாழ்வை உண்டு, உறிஞ்சி, கொழுத்து ஊதி வரும் வடநாட்டு மார்வாரிகளுக்கு 6¼ சதவிகிதம் போதவில்லையாம்; 18 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படவேண்டுமாம்!

வடநாட்டு மார்வாரிகள் இந்நாட்டின் வளத்தைச் சுரண்டிவரும் கொடுமைகளை உணர மறுத்து, நம்மைக் கேலி செய்துவரும் தேசீயத் தோழர்கள், தோழர் பராஷ்மல்லின் கோரிக்கையைக் கண்டபின்பாவது உணரமாட்டார்களா என்பதற்காகவே, மார்வாரிகளின் நோக்கத்தையும், நினைப்பையும் தேசீய தோழர்களுக்குக் காணிக்கையாக வைக்க விரும்புகிறோம்.

திராவிடத்தைக் கொத்த வடநாட்டு வல்லூறுகள் எப்படி எப்படியெல்லாம் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இந்த அதிக சதவிகித வட்டிக் கோரிக்கையே போதிய சான்றாகும்! தேய்ந்துவரும் திராவிடமே, நீ இன்னும் எத்துணை நாட்களுக்குத்தான் இப்படியே தேய்ந்துகொண்டு போவாயோ? உன்னை மீட்க தீ[illegible] திராவிடர்கள் எப்பொழுது வீறிட்டெழுவரோ?

அறிவுக் கதிர்

"செடி கொடிகள் முளைத்த கோபுரங்கள், இடிந்த மதில்கள், முள்முளைத்த பிரகாரங்கள், குப்பைகள் நிறைந்த மண்டபங்கள், ஆடுமாடு மேய்ந்த தளவாடங்கள், பாசி படர்ந்த தடாகம், பொரி கடலை சிந்திய படிகள், இருண்டு வௌவால் புழுக்கை நிறைந்த மண்டபங்கள், தடுக்கி விழக்கூடிய நடைபாதை, எண்ணெய் சிந்திய படி, அது தடவிய சுவர், மினுக்கு மினுக்கென்னும் தீபம், புகை நிறைந்த உள், புகை தூசி விழும் தளம், நாற்றம் வீசும் தீர்த்தத் தொட்டி, புழுக்கள் உறையும் ஆவுடையார், கரப்பான் உலாவும் திருமேனி, பெருச்சாளி பூனை வசிக்கும் கர்ப்பக்கிருகம், அழுக்கு அகலமேனி பொடி முதலிய லாகிரி நுகரும் திருமூக்கும் வாயும் கொண்ட திருமேனி தீண்டுவோர் முதலிய அநேக புனிதங்களையும் காணவும், ஆலயம் செல்லும் ஓர் அன்பன் தன் வீட்டிற்குத் திரும்பினுல், அவன் பாக்கியமே பாக்கியம்"

கோவை சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி. ஏ. பி. எல்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

4—2—50

மாயவரம் :— க. அன்பழகன், என். வி. நடராசன்.

5—2—50

பன்னுங்கோப்பு:— எம். எஸ். சிவசாமி, இராமசாமி. இராசு. தங்கப்பழம், எ. எஸ். இராமசாமி, இராமாமிர்தத்தம்மையார்.

திருப்பத்தூர் (வ. ஆ.) இரா நெடுஞ்செழியன். சத்தியவாணிமுத்து.

யு. எஸ். இராணுவத்தில் நீக்ரோக்களுக்கும் இடம்!

—(0)—

கண்துடைப்பு வேலை இல்லையென்றும் அறிவிப்பு!

நியூயார்க், பிப் 1— நீக்ரோவர்களில் திறமையுள்ள யோக்யதாம்சமுள்ளவர்களை நிறபேதம் காட்டாமல் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று, தன் ராணுவ கமாண்டர்களுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

எல்லோருக்கும் சரிசம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று 1948 ஜூலை 26 பிரஸிடெண்ட் ட்ரூமன் விதித்த உத்தரவுக்கிணங்கவே இப்புது உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாக, ராணுவ காரியதரிசி தோழர் காட்டன் கிரே கூறியிருக்கிறார்

இது கண்துடைப்புக்காக செய்யும் காரியமல்ல என்று ராணுவ நிர்வாகி லெப்டினண்ட் ஜெனரல் ட்ரூஸ் தெரிவித்திருக்கிறார். இதை வரவேற்று 'நியூயார்க் டைம்ஸ்' தன் தலையங்கத்தில் எழுதுகையில் யு எஸ். சர்க்காரைப் பாராட்டியிருக்கிறது

வடஆற்காடு மவட்டத் தோழர்களுக்கு வேண்டுகோள்

நமது மாவட்டத்தில் அமைத்துள்ள நகர—சிற்றூர்—திராவிட முன்னேற்றக் கழகங்களுக்கு அனுப்பியுள்ள சந்தா ரசீதுப் புத்தகங்களை பலகிளைக் கழகங்கள் சந்தா சேர்த்து சென்னை மத்திய கழகத்திற்கு அனுப்பியதாக தெரியவில்லை. ஆகையால் நமது தோழர்கள் அருள்கூர்ந்து உடனடியாக சந்தா வசூலித்து, வசூலிக்கப்படும் தொகையில், வசூலித்த கிளைக்கழகத்திற்கு 0-2-0 வீதமும், எடுத்துக்கொண்டு, சென்னை மத்தியகழகத்திற்கு 0-2-0 வீதமும் சந்தா புத்தகத்தின் அடிக்கட்டையும் அனுப்பிக் கொடுக்க வேண்டுவதுடன், சந்தா புத்தகம் வேண்டப்படும் கிளைக் கழகத் தோழர்களும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

குறிப்பு — நமது மாவட்ட மாநாடு கூட்டவும், மாவட்டக்கழகம் அமைக்கவும் திருவண்ணாமலையில் 5-1-50 ஞாயிற்றுக்கிழமை கூடப்போகும் ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்டத்தில் உள்ள நகர கிளை கழகங்களின் தோழர்கள் வரவேண்டிக் கொள்ளுகிறேன்

எம் நடேசன்
வ. ஆ. அமைப்பாளன், திருப்பத்தூர்.

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

அவசர அழைப்பு

தென் ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடத்துவதற்கான வரவேற்புக் குழு அமைப்பதற்காக, வரும் 5-2-50 ஞாயிறு காலை 3 மணிக்கு, கடலூர் (ஓ. டி.) [illegible] கூட்டம் நடைபெறும். அதுபோது தெ. ஆ. மாவட்டத்தில் உள்ள கிளைக்கழகம் ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

சி. முனுசாமி
தெ. ஆ. மா. தி. மு. கழகம்

பிரிட்டனின் ஸ்டர்லிங் கடன்கள்

லண்டன், பிப். 1— தன் ஸ்டர்லிங் கடன்களைத் தீர்க்க உதவும்படி யுனைடெட் ஸ்டேட்ஸை பிரிட்டன் கேட்டதாக, இதுவரை தகவல் எதுவும் தனக்குத் தெரியவில்லை என்று பிரிட்டிஷ் நிதி இலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

இவ்வாண்டு முடிவிற்குள் பிரிட்டன் பெருத்த அளவில் கடன் உதவியை அமெரிக்காவிடம் கேட்கும் என்று யு. எஸ். நிதிவட்டாரங்களில் கூறப்படுகின்றன.

பிரிட்டிஷ் நிதி அதிகாரிகளுக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க இலாகா அதிகாரிகளுக்குமிடையே பூர்வாங்க பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

'சுதந்திர மணி"

காட்டுப்புத்தூர் தோழர் வை. மா. பொன்னுசாமி, திருச்சி மாவட்ட அடிஷனல் மாஜிஸ்டிரேட் அவர்கள் முன்னிலையில் தம்மை "சுதந்திர மணி" வாரப்பதிப்பின் ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் பதிவு செய்துகொண்டார்.

சொற்பொழிவு

கோலார் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில், 3—2—50 வெள்ளி மாலை 6 மணிக்கு தமிழ் விரிவுரையாளர் தோழர் செல்லப்பன் அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

அந்நியர் சுரண்டி வாழ, நாட்டுக்குரியோர் நலிந்து சாவதா?

—————(0)—————

இந்திச் சனியனை இங்கு நுழைத்து வம்பை விலைக்கு வாங்குவதேன்?

—————(0)—————

சென்னைமாநாட்டில்தோழர் சித்தையன்

[சென்னை தி. மு. க. மாநாட்டில் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு]

உண்மையில் பார்ப்பனத் தலைவர்கள் பலருக்கு, மத்திய சர்க்காரில் இன்று நடைபெறுகிற பல காரியங்கள் பிடிக்கவில்லை—கண்டிப்பாகத் தோன்றுகிறது—ஆனால் அந்த எண்ணம் ஒரு ஒவ்வொரு நேரத்திலும், நாம் அவர்களின் அகக்கண்முன் நிற்கிறோம். நாம் அவர்களைப் பகிஷ்கரிப்போமோ என்று நினைக்கின்றனர். மற்றொரு பயமும் அவர்களுக்குக் கூடவே உண்டாகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லுகிற இந்த அரசியல் பிரச்சினையை ஏற்றுக்கொண்டால், அவர்களின் சமூகப் பொருளாதாரத் திட்டங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டி வருமே, அப்பொழுது சம்பார்ப்பன சமூகத்தின் வாழ்வு என்ன ஆவது, மக்களை இதுவரை ஏமாற்றி வந்ததுபோல் இனியும் முடியாதே என்கிற மற்றொரு பயம் அடிக்கடி அவர்களின் முன்வந்து நிற்கிறது. நான் அவர்களுக்கு இம்மாநாட்டின் மூலமும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஒருவார்த்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எத்தனை நாளைக்குத் தான்......!

பார்ப்பனத் தோழர்கள் இனி எவ்வளவு தான் பாடுபட்டாலும், எத்தனை பலம், புராண இதிகாசங்கள் மூலம் தேடினாலும், அழிந்து கொண்டிருக்கின்ற மதத்தையும் விடாக்கண்டி இருந்து கொண்டிருக்கிற இந்து சமுதாயத் தரப்பு, அதன் கோட்பாடுகளையும் அவர்கள் நெடுநாளைக்குக் காப்பாற்ற முடியாது. நீண்ட நாளைக்கு இன்று நிலவி வரும் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் நிலைபெற முடியாது. இதை அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். நமது சமுதாயக் கொள்கைகளை எதிர்ப்பதற்காகவே, வேறு பல நல்ல அரசியல் காரியங்களையும் செய்யப் பின்னடைய வேண்டிய நிலையில் அவர்கள் தங்களாகவே வைத்துக்கொண்டுவிட்டார்கள். இந்த நிலை இந்த நாட்டு நன்மைதானா? இந்த நிலை இருப்பது நியாயந்தானா? இன்னும் எவ்வளவு நாட்களுக்குப் பார்ப்பனரும், பார்ப்பனரல்லாதாரும், இந்தச் சமுதாயக் கொடுமைகளுக்காக ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு வாழ்வது? என்று அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். இனி வடநாட்டுத் தலைவர்கள் உங்கள் அறிவுத்திறனை மதிக்கப் போவதில்லை. அப்படியாயின் இன்னும் எவ்வளவு நாட்களுக்குத் தன் வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்குத் தாசராயிருந்து, இந்நாட்டை வடநாட்டவர் சுரண்டப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். நான் இவைகளைச் சொல்லும்போது பார்ப்பனர் தலைவர்களுக்கு ஆத்திரம் பொங்கும்—ஆக்ரோஷம் உண்டாகும். ஆனால் ஆத்திரம் அடங்கிய வேளையில், சற்று சிந்தனைக்கு வேலை கொடுத்து யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

நெஞ்சு பொறுக்குதில்லையே

வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு ஐக்கிய முன்னணி ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டியதற்குச் சரியான சமயம் வந்துவிட்டதா, இல்லையா என்று யோசித்துப் பாருங்கள்.

சகல செல்வங்களையும் வைத்துக்கொண்டு ஏக்கிறோம், உழைத்து உழைத்து உழைப்பின் பயனை வேறொருவருக்குக் கொட்டிக்கொடுத்துவிட்டு நம்முடைய மக்களை பஞ்சைகளாய், பனுவைகளாய் எத்தனை நாளைக்கு வைத்துக்கொண்டிருப்பது? இந்நாட்டு மக்கள் இந்த மண்ணிற்கு உரித்தானவன் இங்கு வாழவகையின்றி வயிற்றுப்பிழைப்பிற்காக வெளிநாடுகளில் கூலிகளாக உள்ள வேலை நிலைமை இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுத்துக்கொண்டிருப்பது. அப்படிக் கூலிகளாகப் போனவர்களில் உங்களைத்தவிர ஒருவர் கூட இல்லையே என்று இறுமாப்புடன் இருக்கலாம். அல்லது அந்த அவதி உங்களுக்குத் தோன்றுமிருக்கலாம். எங்கள் உடன்பிறந்தார்கள், எங்கள் இரத்தக் கலப்புள்ளவர்கள். மலேயா ரப்பர் தோட்டங்களில், சிலோன் நாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் அவதியுறுவதை அந்தந்த நாட்டு அரசாங்கத்தாரும், முதலாளிக் கூட்டமும் அவர்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளைக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும், எங்கள் நெஞ்சம் வேகிறதே—இந்த நிலைமை நாங்கள் ஆத்திரப்படாமல் வாளா இருக்க முடியுமா? ஒரு கணமாவது உங்கள் சிந்தனையில் இது இடம் பெற்றிருந்ததா?

காமன்வெல்த் மாநாட்டிற்கும் போன இந்தியப் பிரதமர் பண்டித நேரு இலங்கை வாழ் இந்திய பிரச்சினையைப் பற்றி பேசமுடியாது என்று கூறிவிட்டார், உண்மையில் இந்த நாட்டு மகன் ஒருவன் அவருடைய நிலையில்—அமைச்சர் பதவியில் இலங்கை சென்றிருந்தால் அவரிடமிருந்து நேரு கூறிய பதில் நாம் எதிர்பார்த்திருக்க முடியுமா—அப்படியே இலங்கையில் பேசிவிட்டாலும் திரும்பி வந்து தாய் நாட்டில் பதவியிலிருக்க ஒப்புவோமா?

வெள்ளையன் வருவதற்கு முன் இந்நாடு ஒரே நாடுதானா? ஒரே கலை ஒரே நாகரிகம் படைத்த போதாவதிருந்திருக்கிறதா, எப்போதாவது இருக்கமுடியுமா? சிந்தியுங்கள் நண்பர்களே!

முடிவுக்கு வாருங்கள்

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு ஒரு முடிவுகட்டுவது, அதாவது என்ன விலையேனும் கொடுத்து இந்நாட்டுக்கு ஒரு தனியாட்சி ஏற்படுத்தி அமைப்பது அதுவும் மக்களாட்சி, சமதர்ம ஆட்சி அமைப்பது என்னும் அரசியல் கொள்கைகளை நாங்கள் அறப்போரிலிறங்கி அதில் நீண்டதூரம் பயணமும் வந்துவிட்டோம். அந்தப் பயணத்தில் இதுவரை உங்களில் லட்சக்கணக்கான ஒருவருமில்லை என்பதுமட்டுமல்ல, எங்கள் பயணத்தைத் தடுக்க உங்களின் அறிவு, ஆற்றல், பணம், பலம் ஆகியவைகளை இதுவரை பயன்படுத்துகிறது. அதன் பலனாக மாறுதலுக்குச் சற்றுப் பலம்கூட கிடைத்திருக்கிறது என்பதை நாங்கள் மறக்கவில்லை. அந்த நோக்கில் நாங்கள் உங்களில் பலரை எங்கள் விரோதிகளாக ஒப்பிட்டுக் கடிந்திருக்கிறோம். ஆனால் எங்கள் கடிந்துரைப்பின் பயனும் இந்த நாட்டில் இதுவரை எந்தப் பார்ப்பானுடைய சுண்டுவிரலில் சிறு காயம் கூட ஏற்பட்டது என்று கூறமுடியாது. நாங்கள் பலாத்காரமற்ற முறையில் எங்கள் நெறி வழிப் பணியைத் தவறாது செய்கிறோம். நீண்டதூரம் வந்ததற்குப் பிறகு இன்று உங்களைக் கேட்கிறோம். எங்கள் நோக்கங்களில், திட்டங்களில் ஐயப்பாடு, தெளிவின்மை உங்களுக்குப் பட்டால் எங்களிடம் விளக்கம் கேளுங்கள். எங்களுடைய பதில் சொல்லவும் ஐயத்தைத் தெளிவிக்கவும் தயாராக உள்ளோம். வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பணியில் இதை எல்லா நாங்களுடைய கூடிக்கலந்து பேச வாய்ப்பு ஏற்படுத்தினாலும், அதற்கும் எங்கள் கழகம் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும் அதில் கலந்து பேசவும் தயாராக உள்ளது. ஆகவே பார்ப்பன நண்பர்களே—விரைவில் நல்ல தெரு முடிவிற்கு வரவேண்டுகிறேன். காலந்தாழ்த்துவது உங்களுக்கும் நல்லதல்ல—இந்த நிலை தொடர்ந்தால் நம் நாட்டுப் பார்ப்பனர்களின் செவிகளில் விழுகிறதே இல்லையோ, இது நம் கடமை—எடுத்துச் சொல்லவேண்டிய நெருக்கடியான கட்டத்திற்கு வந்திருக்கிறோம் என்ற எண்ணத்தில் இவைகளைச் சொல்லிவிட்டேன்—இவைகளைப் பற்றி மேலும் என்ன செய்வது என்பதுபற்றி அந்த ஆசாமியிலிருந்து தான் தெரிய வேண்டும்.

அறப்போர் ஆரம்பமாகலாம்!

அரசியல் அமைப்புமுறைச் சட்டங்களைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் இந்த சந்தர்ப்பத்தில் கூற வேண்டியவனாகிறேன் என்று கருதுகிறேன். இந்த மாகாணத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை நீண்டகாலமாக அமுலிலிருந்து வருகிறது. சமூகத்தில் பின்னடைந்த மக்களுக்கு எல்லாப்பொது வசதிகளில் சமநீதி வழங்கப்படவேண்டுமென்பதற்காக ஏற்பட்ட ஒரு நல்ல நீதி. ஆனால் இந்திய அரசியல் சட்டப்படி அம்முறை இந்த ஜனவரி 26 லிருந்து நீக்கப்பட்டுவிடும் என்று அஞ்சுகிறேன். சமூகத்தில் மக்களுக்குள் எந்தவித பேதாபேதமும் காட்டக்கூடாது என்பது நம் கழகத்தின் அடிப்படைக் கொள்கையில் முக்கியமான ஒன்று. ஆனால் ஒரு சமூகம் வேகமாக முன்னேறவும், மற்றொரு சமூகம் மிக மிக பின்னடையுமாயிருக்கும் சமுதாய அநீதியைப் போக்குவதற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறை வெகுவாகப் பயன்பட்டது. ஆனால் அரசியல் சட்டத்தில் ஜாதிகள் இல்லை—பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கொள்கைகளில் பார்க்கிறபோது இது மிக மிக உயர்ந்த செய்கை தான். ஆனால், இவை நடைமுறைக்கு வரும்போது, இன்று பிற்போக்கிலிருக்கும் சமூகங்களின் நிலை பற்றி எந்த முறை கையாளப்படும் என்பது திட்டமாகத் தெரியவில்லை. சட்டத்திலுள்ள வாசகங்கள் எழுத்துக்கெழுத்து—இவை சம்பந்தப்பட்டவரை எல்லாசமூகங்களின் மத்தியிலும் காட்டப்படுமா என்று நான் மிக மிக ஐயுறுகின்றேன். இன்றைய சமூக அமைப்பு அதைத்தான் எனக்குப் பிறிவுறுத்துகிறது.

நடுமத்தில் கண்ணுயிருப்போம்

நம்முடைய மொழிப் போராட்டம் மீண்டும் எப்படி, எப்போது, எங்கே துவக்கப்படப்போகிறது என்பது பற்றியும் நாம் ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டும்.

மொழிப் போராட்டத்திலீடுபட்டதின் பயனாய் நாம் இந்நாட்டு மக்களின் சிந்தனையைத் தூண்டி இந்தி இந்த நாட்டுக்குத் தேவையா என்பது பற்றி மக்கள் சிந்திக்கச் செய்திருக்கிறோம். ஆனால் வடநாட்டுக்கு கட்டுப்பட்ட இந்த மாகாண சர்க்கார். வேண்டுமென்றே வம்பை விலைக்கு வாங்குவது போல் மேலும், மேலும் தொல்லை விளைவித்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

இனி நமது வேலை பன்மடங்கு பெருகியாக வேண்டும். மத்திய அமைப்புக் குழுவின் முடிவுப்படி இவ்வாண்டு மார்ச்சு திங்களுக்குள் கம் அமைத்தினர் எண்ணிக்கை ஒரு லட்சமாகவிக் காட்ட வேண்டும். கருமமே கண்ணாயிருப்போம் வெற்றி நமதே—இப்படைப்போர் இன் எப்படை [illegible]ம்!

கழகப் பொதுச்செயலாளரின் மதுரை மாவட்டச் சுற்றுப் பிரயாணம்

தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் சி. என் அண்ணாத்துரை அவர்கள், தோழர்கள் என். ஜீவரத்தினம், ஈ. வெ கி. சம்பத், என். வீராசன் ஆகியவர்களுடன் மதுரை மாவட்டத்தில் 8—2—50 முதல் சுற்றுப் பிரயாணம்செய்கிறார்கள். மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் டி. அவுடையப்பன் அவர்களும், துணைச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் உடன் செல்வார்கள்.

8—2—50

காலை 7-15 மதுரை வருகை புகை வண்டி நிலையத்தில் வரவேற்பு
,, 9-00 அழகாடியில் கொடி யேற்றுதல்
,, 11-00 சமயநல்லூர் — கொடி யேற்றுதல்
,, 12-00 தேனூர்—கொடி ஏற்றுதல்
,, 12-30 சோழவந்தான்— பகல் உணவு—ஓய்வு
மாலை 4-30—7-00 வாடிப்பட்டி— பொதுக்கூட்டம்
,, 7-30 10-00 நிலக்கோட்டை— பொதுக் கூட்டம்—தங்கல்

9—2—50

காலை 8 00 நிலக்கோட்டையில் சிற்றுண்டி
,, 12-00 பட்டிவீரன்பட்டி பகல் உணவு
மாலை 3-00 4-00 பொதுக்கூட்டம் [பட்டிவீரன்பட்டி]
,, 4-30—5-30 வத்தலக்குண்டு— பொதுக் கூட்டம்
,, 7 00—10 00 திண்டுக்கல்— பொதுக்கூட்டம்—தங்கல்

10—2—50

காலை 8 00 திண்டுக்கல் (சிற்றுண்டி)
,, 12 00 கூடலூர் - பகல் உணவு
மாலை 3 30—4-30 பொதுக்கூட்டம் (கூடலூர்)
,, 5 00—6 00 கம்பம் — பொதுக்கூட்டம்
,, 7.00—9.00 தேனி— பொதுக்கூட்டம், தங்கல்

11—2—50

காலை 8-00 தேனி—(சிற்றுண்டி)
,, 9 00 போடி— பொதுக்கூட்டம்
,, 12-00 பெரியகுளம்—
மாலை 4 00—5 00-மாணவர் கூட்டம்
,, 6-00 8 00 பொதுக்கூட்டம்- இரவு உணவு
,, 10 00 மதுரை பயணம்

12—2—50

காலை 8-00 மதுரை (சிற்றுண்டி)
,, 9-00 சந்தைப்பேட்டை— அழகிரிசாமி படத்திறப்பு
,, 9-30 கீழமாசி வீதி— கொடி ஏற்றுதல்
,, 10 00 தாலமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம் தியாகராயர் படத்திறப்பு
,, 12 00 பகல் உணவு—ஓய்வு
மாலை 4—5-30 மேலூர் பொதுக்கூட்டம்
,, 6-30 9 30 மதுரை— பொதுக்கூட்டம், தங்கல்

13—2—50

மாலை 4 00—5 30 அமெரிக்கன் கல்லூரிக்கூட்டம்
,, 6-30—9 00 சோழவந்தான்- பொதுக்கூட்டம், தங்கல்

பொங்கல்விழாக்கூட்டங்கள்

அனந்தபூர்

அனந்தபூர்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பாக 14-1-50ல் எம். டி. டி. சி. அருகாமையில் உள்ள மைதானத்தில், பொங்கல் திருவிழாக்கூட்டம், தோழர் டி. எ. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் என். வி. பே. சாமி, எ. சவமிநாதன், ஜெ. பி. ஜெயராஜ், எம். என். ராகின் முதலியோர் திருநாளைப் பற்றிப் பேசினர்.

செயங்கொண்டம்

செயங்கொண்டம்:—இவ்வூரில் 14-1-50 அன்று, காந்தி பூங்காவில் தமிழர் திருநாள் மிகச் சிறப்புடன் நடந்தேறியது. விழாவிற்குத் தோழர் எம். பரமசிவன் தலைமை தாங்கினர். தோழர்கள் துரை. கதிர்வேல், ஆ. இராமசாமி, க. நடராசு, கே. எஸ். காசிம் ஆகியோர் திருநாளைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். முடிவாகத் தோழர் இராமசந்திரன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

திருவனந்தபுரம்

திருவனந்தபுரம்:—தி. மு. க. கிளையின் சார்பில், 22-1-50 ஞாயிறன்று பொங்கல் விழா மிகச்சிறப்புடன் நடந்தேறியது.

விழாவிற்குத் தோழர் வி. திருமணி தலைமை தாங்கினர். தோழர் வள்ளிப்பெருமாள் விழாவின் சிறப்பைப்பற்றியும் வள்ளுவரைப் பற்றியும் விளக்கமாகப் பேசினர். பிறகு முக்கல் சொற்போட்டியும், எழுத்துப்போட்டியும் நடைபெற்றது.

கடுவனூர்

கடுவனூர்:—(கள்ளக்குறிச்சி வட்டம்) 14-1-50-ல், இவ்வூரில் பொங்கல் விழா நடைபெற்றது. அதுபோது இவ்வூர் மிலக்கிமார் தோழர் வெங்கட்ராம அவர்கள் தலைமை தாங்கினர்.

விழாவின் பேச்சுப் போட்டியில் தோழர்கள் பாண்டலம் சேகர், சேமண்டார்க்குடி குசைமா, தோழியர் மலையர்க்கரசி, கள்ளக்குறிச்சி ம. இலக்குவன், குமார—தனிகாசலம், கடுவனூர் நாராயணசாமி ஆகியோர் பேசினர். இரவு 8 மணிக்கு நன்றி கூறுதலுடன் விழா இனிது முடிந்தது.

வடகோவை

வடகோவை:—14—2—50 அன்று பொங்கல்விழாவ கோவை மாரியப்பகோனர் செரு, 3-8 இல்லத்தில் தோழர்கள் ராமச்சந்திரன், கிருஷ்ணன் ஆகியோரின் முயற்சியினால். தோழர் சி. எம். சித்தராஜ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புலவர் சுந்தரராசனர், பாலதண்டபாணி, என். கஞ்சப்பா, சி. வி. கோபால் ஆகியோர் விழாவைப்பற்றி விரிவான சொற்பொழிவாற்றினர்கள். ஓவியங்கள் வரைந்து உதவிய தோழர்கள் பி. ஜார்ஜ், பழனியப்பன் ஆகியோருக்குப் பரிசு வழங்கப்பட்டது. தலைவர் முடிவுரை கூற, இன்னிசையுடன் விழா இனிது முடிந்தது.

நன்றி அறிவிப்பு

சென்னையில், சென்ற ஜனவரி, 21, 22 ஆகிய தேதிகளில் நடைபெற்ற, சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு மிக வெற்றிகரமாக, சிறப்புடனும் நடந்தேறியதற்குக் காரணம், தி. மு. கழகத் தோழர்களின் தன்னலங் கருதா ஒத்துழைப்பேயாயினும், சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கும், எதேச்சாதிகார அரசாங்கத்தைத் தட்டி எச்சரிக்கை செய்த மாநாட்டின் முடிவை, பட்டவர்த்தனமாக உலகுக்கு எடுத்துரைக்க சென்னையின் தலைசிறந்த பத்திரிகாசிரியர்கள் முன்வந்தார்களென்றால், அதற்குக் காரணம், இயக்க அனுதாபிகள் மட்டுமல்ல; சில குறிப்பிட்ட மாற்றுக்கட்சி தோழர்களின் மறைமுக ஒத்துழைப்பும்கூட என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அத்தகைய தோழர்கள் என்றும் நமது பாராட்டுதல்களுக்குரியவர்களே!

பண வசதி இல்லாத நிலையில், தனிப்பட்ட யாரிடமும், சென்று நன்கொடைகள் வசூலிக்காமல், மாநாட்டுக் கொட்டகைபோட, இடம் கிடைத்துவிட்டதா இல்லை, என்ற அச்சமான சூழ்நிலையில், ஒரே வாரத்தில் மாநாட்டின் ஆக்கவேலைகள் துவக்கப்பட்டன. இதுகாரணம் பற்றியே நமது அன்பிற்குப் பாத்திரமான மதிப்பிற்குரிய சிற்சில வெளியூர்த் தோழர்களது முழு வசதியையும் கவனிக்க இயலாமற்போய்விட்டது. மாநாடாவது நடைபெறுவதாவது, என்ற ஏளனப் பேச்சுகளும், எதிர்ப்பேச்சுக்களும் கிளம்பியதைக் கேட்டதும். மாநாடு பெருமிதத்துடன் நடைபெறவேண்டுமென்ற உறுதிகொண்டுள்ள மாநாட்டின் வரவேற்புக் கழகத்தாருக்கு, மாநாட்டின் தேவையான செலவுகளில் ஓரளவிற்குத்தான் சிக்கனமாக இருக்க முடிந்தது. தொட்டதற்கெல்லாம் பணம் என்றாலொழிய அந்த இடத்தில், கொட்டகை, அமைப்பு வேலைகள் பூர்த்தியாகியிருக்காது. இது காரணம் பற்றியே, நமது அருமை உள்ளூர் இயக்கத் தோழர்களிடத்தும், நுழைவுச் சலுகைகளில் சற்றுக் கண்டிப்பாகவே, இருக்கவேண்டியிருந்தது. இவையாவும் மாநாட்டின் வெற்றியிலே கவலை கொண்டதே என்பதோடு, சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிவிருத்திக்குத்தான் என்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பிரியப்படுகிறோம்.

ஒளிமிகு விளக்காக முன்னேற்றக் கழகம், பிரகாசிக்கின்றது என்று, இதுகாறும் அறியாத அரசாங்கத்திற்கு அறிவுரைதந்து அறநிலையை விளக்கிய, பொதுச்செயலாளர் சி. என். அண்ணாத்துரை, அவர்களுடைய ஒத்துழைப்பும், பகலென்றும், இரவென்றும் பாராமல் சளையாது பணியாற்றிய, வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் டி. எம். பார்த்தசாரதி கழக வெற்றியே, தனது வெற்றி என்றகருத்துடன் தளர்வென்பது தனதல்ல என்பதை மெய்ப்பித்துப் பணியாற்றிய தோழர் சி. வி. ராஜன், காங்கிரஸ் ஆட்சியிலும் நம்மால் அனேகம் சாதிக்க இயலும் என்பதைத் தனது தொண்டினால் நிரூபித்து. தண்ணீர் வசதி, சுகாதார வசதி, மின்சார வசதி ஆகியவைகளை சிறப்பித்துத் தந்த தோழர் வி. முனுசாமி, உங்கள் அனைவரது தொண்டினிற்கும், நான், சளைத்தவனல்ல என்பதை மெய்ப்பித்துக் காட்டிய தோழர் கே. எம். கண்ணபிரான், குறையேற்பட்ட இடத்தில் தனது பணியாற்றி பூர்த்தி செய்து தொண்டு செய்த, தோழர் காஞ்சி மணிமொழியார், மக்கள்பணியே தனதென கருதி இடைவிடாது உழைத்த தோழர் இரா. நெடுஞ்செழியன், தொண்டர் படைத் தலைவனுக்குத்தானே, அருகதை என மெய்ப்பித்துக் காட்டிய, சேஷாசலம், பெண் தொண்டர்படைக்குத் தலைவி பாகம் தகுதிமிக்க தொண்டுபுரிந்த வீராங்கனை தோழியர் அம்மேலு அப்பாத்துரை மற்றும் மாநாட்டில் தலைமைதாங்கி மாநாட்டைச் சிறப்பித்த சேலம் தோழர் ஏ. சித்தையன், திறப்பாளர் மதுரை தோழர் எஸ். முத்து, நமது அழைப்பிற்கு வருகை தந்து சொற்பொழிவாற்றிய தோழியர் மூவலூர், இராமமிர்தத்தம்மையார், விருதுநகர் தோழர்கள் ஆசைத்தம்பி வேலூர் சிற்றரசு ஆகியோருடையவும் மாநாட்டுப் பந்தலை அலங்கரித்த அழகிரி ஓவியத்தை அன்பளிப்பாக உதவிய பாலு பிரதர்ஸ், வர்ண வேலைகள் செய்து தங்கள் நிபுணத்துவத்தைக் காட்டிய, ஓவிய நிபுணர்கள் ஆர். டி. அரசு, ஏ. கே. சாமி, மற்றும் நாடகத்தைச் சிறப்பித்துத் தந்த நடிப்புப் புலவர் கே ஆர் ராமசாமி அவர்களும், அவர்களது குழுவினரும், ஈழத்தடிகன், இராம. அரங்கண்ணல், மின்சார விளக்குகள் அமைத்துத்தந்த 20-வது நூற்றாண்டு ரேடியோ சர்வீசார், ஒலிபெருக்கி அமைத்துத்தந்த முருகன் ரேடியோ கம்பெனியார், பந்தல் அமைத்துத் தந்த ஆர். சுப்ரமணியம், ஆம்புலன்ஸ் படையாளர் மற்றும், லிங்கராஜ், மாணிக்கம், விநாயகம், ஏ. பி. அரசு, பிரகாசம் லிங்காதன் சிபஞ்சாட்சரம். ஜெயராமன், கும்பகர்ணன், ஆகியோரது உள்ளன்புடன் கூடிய தொண்டுகள் பாராட்டப்படவேண்டியனவாக விளங்கின. மேல்குறிப்பிடப்பட்ட தோழர்களுக்கும், இன்னும் ஒத்துழைத்த மற்றத் தோழர்களுக்கும், மாநாட்டின் வரவேற்புக் கழக சார்பாக எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கே. கோவிந்தசாமி
ஏ. எஸ். ராமன்
செயலாளர்கள்
செ. மா. தி. [illegible] முதல் மாநாடு

நாட்டு நடப்பு

நபிநாயகம் பிறந்த தினவிழா

பொள்ளாச்சி, ஜன 26—

பொள்ளாச்சி முஸ்லிம் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் எஸ். காதர்முகம்மது ரூவுத்தர் அவர்கள் ஆதரவில் திருப்பூர் மௌல்வி நின்சாஹிப், அவர்களால் 14-1-50 முதல் 18-1-50 வரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றையும் இன்றைய முஸ்லிம்களின் நிலையும் என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது.

* * *

போலீஸ் நிலையம் திறப்பு விழா

கடம்பூர், ஜன. 15 —

இவ்வூரில் பல ஆண்டுகளாக இருந்து பணியாற்றி வந்த அவுட் போலீஸ் நிலையத்தைத் திருத்தி சப் இன்ஸ்பெக்டர் உள்ள போலீஸ் நிலையமாக அமைத்துக் கொடுக்கும்படி பொதுமக்கள் அரசாங்கத்தாரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 15—1—50 காலை 11 மணிக்கு கோவில்பட்டி, சர்க்கிள் இன்ஸ்பெக்டர். தோழர் ஆர். சுகுணி அவர்கள் தலைமையில் திறவுவிழா. அன்று மேள வாத்தியத்துடன் ஊர்வலமும் தி. மு. கழகத்திலிருந்து ஊர்வலமும் புறப்பட்டு போலீஸ் நிலையம் வந்து சேரும் தி. கா. க. செயலாளர் அ. ராமச்சந்திரன் அவர்கள் சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்தார். அதன்பின் தோழர்கள், காங்கிரஸ் உறுப்பினர் எஸ். டி. வி. நாதன் தி. மு. க. செயலாளர். எம். எஸ் பொன்னுச்சாமி. அவர்களும் போலீசாரும் பொதுமக்களும் அன்று சொற்பொழிவாற்றிய பின் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாகவும், தி. மு. கழகத்தின் சார்பாகவும் மலர் மாலை அணிவித்து திறப்பு விழா இனிது நிறைவேறியது.

* * *

திராவிட முன்னேற்றக் கழக மறுமலர்ச்சி நாடக மன்றம்

பெங்களூர், ஜன. 26—

பெங்களூர் 167-ஏ. அரிசிப் பேட்டையில் 21-1-50 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தி. மு. க. செயலாளர் இளஞ்சேரன் அவர்களது தலைமையில் நாடக ஆசிரியரும் ஸ்டார் நாடக சபாவின் உரிமையாளருமான எஸ். எம். மூசாசான் அவர்கள் தி. மு. க. மறுமலர்ச்சி நாடக மன்றத்தைத் திறந்து வைத்து, அநேக பல அறிவுரைகள் ஆற்றினார். கூடிய சீக்கிரத்தில் நாடகம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. தேநீர் விருந்துக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

* * *

திராவிடநாடு பகுத்தறிவு நிலையம்

பம்பாய், ஜன. 26—

22—1—50ல் திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்தரக் கூட்டம் தோழர் எஸ். பெரியஸ்வாமியவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப்பின் செயலாளர்வர்களால் நடந்த கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

புது வருட சந்தா உறுப்பினர்களிடமிருந்து ரூ. 1/ வீதம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டது இந்நிலை பகுத்தறிவு சங்கத்தின் கடிதம் படிக்கப்பட்டது விரும்பியவர்கள் யாவரும் அச்சங்கத்திற்கு ஆண்டு சந்தா அனுப்பி உறுப்பினர்களாக சேர்க்க செய்யப்பட்டு மற்றும் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தலைவர் பின்னுரைகூற, நன்றி கூறலுடன் கூட்டம் கலைவுற்றது.

* * *

திருவள்ளுவர் தமிழ்க் கழகம்

திருச்சி, ஜன 26

திருவள்ளுவர் கழகங்களின் ஆதரவில் கூட்டப்பட்ட திருவரங்கம் சுதேசிப் பொருட்காட்சிசாலையில் திருக்குறள் நெறிகளைப் பிரச்சாரம் புரிந்த திருவள்ளுவர் கலைக்காட்சி அரங்கின் உறுப்பினர் கூட்டம் 15-1-50 காலை 9-மணிக்கு திருச்சி, மேலப்புலிவார்டு யுனைடெட் இந்தியா லாட்ஜ் மாடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஜி வரதராசன் தலைமை வகித்தார். உள்ளூர், சீரங்கம், திருவானைக்காவலிருந்து பல பிரமுகர்களும், தமிழ்ப் புலவர்களும் வந்திருந்தனர். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் முதலியவர்களிடமிருந்து கிடைத்த கருத்துரைகள் வாசிக்கப்பட்டன. பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1 கலைக்காட்சியின் வரவுசெலவு கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 இக்கலைக்காட்சியைத் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் எடுத்துச்சென்று நடத்துதல் என முடிவு செய்யப்பட்டது.

3 கலைக்காட்சிக்குத் தங்கப் பதக்கப் பரிசு அளித்த பொருட்காட்சி நிர்வாகிகளைக் கூட்டம் பாராட்டுகிறது.

4 நகரசபைக்கும் பொழிக்கும் நல்ல பணியாற்றிவரும் நகரசபை ஆணையாளர் ப சுப்பராயன் அவர்களை மாற்றுவதாக உள்ள செய்தி அறிந்து கூட்டம் வருந்துவதுடன், அவ்வுத்திரவை அன்புகூர்ந்து ரத்து செய்யுமாறு அரசியலாரைக் இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

பின் செயலாளர் சே. துரைராசன் நன்றி கூறும்வகையில், இம்மாதிரியாகத் திருவள்ளுவர் கலைக்காட்சி நடத்தப்படுவது தமிழ்நாட்டில் இதுதான் முதல்தடவை என்றும், இம்மாதிரியான முயற்சியில் நம் அறிஞர்கள் நல்ல திட்டங்களை நிறைவேற்றிவைக்க ஆவனசெய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்.

திருத்தம்

'மாலைமணி' 28-1-50 உள்ளூர்ப் பதிப்பு 2-வது பக்கம் 5-வது கலம் 2-வது பாராவில் 'சென்னை மாகாணத்தைத் தனி மாகாணமாக்குதல் கூடாது' என்றிருப்பதை 'சென்னை நகரைத் தனி மாகாணமாக்குதல் கூடாது' என்றும், 3-வது பாராவில் 'சென்னை மாகாணத்தைத் தனி மாகாணமாக்க வேண்டுமென்று' என்றிருப்பதை 'சென்னை நகரைத் தனிமாகாணமாக்கவேண்டுமென்று' எனவும் திருத்திக் கொள்க.

• • •

[“மாலை மணி” (சென்னை 1-2-50 வெளியூர் 2-2-50) இதழில் 3-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள தோழர் சித்தையன் சொற்பொழிவிற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள ஆசிரியர் குறிப்பில் 20-1-50 என்றிருப்பதை 28-1-50 எனக்கொள்க. ஆ-ர்]

கர்நாடக மாவட்ட தி. மு. கழக. அமைப்பு

கர்நாடகப் பகுதி தி. மு. கழக தோழர்களே.

நமது பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் கோலார் தங்கவயலுக்கு வர இசைந்துள்ளதை ஒட்டி, தங்கவயல் திராவிடமுன்னேற்ற கழகச் செயற்குழு கூட்டம் 25-1-50-ல் கூடி, கர்நாடகப் பகுதியிலுள்ள நம்மினக் கழகங்களை ஒன்று கூட்டி மேற்படி மாவட்டக் கழகம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. எனவே தங்கள் விருப்பத்தையும், ஆலோசனையையும் 4—2—50-க்குள் கீழ்க்காணும் என் முகவரிக்கு அனுப்பவேண்டுகின்றேன்.

அமைப்புக் கூட்டத்தின் இடம், தேதி அடுத்து அறிவிக்கப்படும்.

டி கே. சின்னத்துரை
தி. மு. கழக விளம்பர உறுப்பினர்.
உரிகம் சார்ட்டவுன் உரிகம் K.G.F.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அபார நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

மதிப்புரை

மதிப்புரை வேண்டுவோர் இரண்டு பிரதிகள் அனுப்பிவைக்க வேண்டும். (ஆ-ர்)

‘THE NATIONAL CALL’

“தி நேஷனல் கால்”

(ஆங்கில வார கிழமை வெளியீடு)

[ஆசிரியர்: எம். ஜி. இலட்சுமணதாஸ்; கிடைக்குமிடம்: 15-குப்பையா செட்டித் தெரு சென்னை—17 விலை அணா 2]

தோழர் எம். ஜி. இலட்சுமணதாஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'நேஷனல் கால்' என்னும் கிழமை இதழ் வரப்பெற்றோம். இவ்விதழ் எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்னும் வள்ளுவர் வாக்கைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஓர் ஆங்கில வெளியீடாகும். அத்துடன் சமத்துவம், சமரசம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட திராவிட தனிநாட்டுக்கும் இவ்வேடு பாடுபடுமெனத் தெளிவாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியத் துணைக்கண்டத்தை ஒரே தேசம் என்று பறைசாற்றித் திரிவோர்க்கு திராவிட தேசம் ஒன்று உண்டு என்பதை அறிவுறுத்தும் நாட்டம் வகையில் இப்பத்திரிகை வெளிவந்து அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்விதழின் முதல் வெளியீட்டில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் கவிஞர் பாரதிதாசனின் பாடல், திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றம் பற்றி தோழர் அண்ணாதுரையின் பேச்சு, மொழிப் பிரச்னை பற்றி தோழர் சா. அப்பாத்துரை எம். ஏ எல் டி. அவர்களின் கட்டுரை ஆகியவை குறிப்பிடத்தக்கவைகள். மேலும் இவ்வேடு நாட்டில் கல்விப் பிரச்சாரம் செய்யும் [illegible].

இக்கணம், அழகிய அச்சு, செய்கு [illegible] பணி, [illegible] உதவி இத்தனையும் ஒருங்கே அமையப்பெற்று வெளிவந்திருக்கும் 'நேஷனல் கால்' திராவிடருக்கு ஒரு ஆங்கில வார இதழ் இல்லையே என்ற குறைபாட்டைக் களைவதாக உள்ளது. பத்திரிகையின் முகப்புச் சித்திரம் சுருக்கமான முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய 'நேஷனல் கால்' தொடர்ந்து பணியாற்றி வெற்றிகாண விழைகிறோம்.

• • •

“சினிமா தூது”

[ஆசிரியர் ஏ. எஸ். கார்த்தி; கிடைக்குமிடம்: சினிமா தூது அலுவலகம், அன்புப் பண்ணை, மதுரை. விலை: அணா 1½]

திரைப்பட உலகுடன் தொடர்பு கொண்ட பத்திரிகைகளைச் சேர்ந்த ஒரு வார இதழே இது. விளம்பரத்திற்கென்றே [illegible] கிளம்பி—விலைமிகுந்து வெளிவருவதோடு வெளிவரும் சில பத்திரிகைகளைப் போலன்றி, கருத்து செறிந்தும், சுவையான விலையிலும், வெளிவருவது பாராட்டத்தக்கது. கலையுலகில் மூத்தோர்க்கும், [illegible] 'சினிமா தூது' முன்வருமென நம்புகிறோம். அதில் “வெள்ளித்திரைப் போட்டி” என்ற பெயரில் ஒரு பட்டத்துக்கு ஆக்கமளிக்கும் பகுதி விரும்பத்தக்கதன்று.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1